ஒப்புகை பெறத்தக்க பதிவு

கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகம்,
தேசிய நேடுஞ்சாலை வட்டம், சேலம்.

டி.ஆர்.பி.எண்.145/ வ.அ/ தே.நெ/2025/ நாள்.27.05.2025.

பெறுநர்,

திருவாளர்கள்.பி.எம். இன்ப்ரா
ஒப்பந்தக்காரர்கள்,
2/396-3, கரையான்புதூர்,
பாப்பநாயக்கன்பட்டி (அஞ்சல்)
நாமக்கல் மாவட்டம் - 637003.

அன்புடையீர்,

பொருள் : சேலம் (தே.நெ) வட்டம்- சேலம் (தே.நெ) கோட்டம்- மத்திய சாலை நிதி திட்டப் பணி - 2024-25 - புதன்சந்தை - கொண்டம்பட்டி - முசிறி - சாலையில் கி.மீ 4/0 - 8/6 வரை ஒருவழித்தடத்திலிருந்து இருவழித்தடமாக அகலப்படுத்துதல் மற்றும் மேம்பாடு செய்தல சிறுபாலங்களை கட்டுதல் மற்றும் திரும்ப கட்டுதல் மற்றும் தாங்குச் சுவர் மற்றும் பாதுகாப்பு சுவர் கட்டுதல் பணிக்கு வேலை உத்தரவு வழங்குவது- சம்மந்தமாக.

பார்வை :
1. தங்களது ஒப்பந்தப்புள்ளி நாள்.15.04.2025
2. தங்களது விலை குறைப்பு கடிதம் நாள்.13.05.2025
3. தலைவர்/முதன்மை இயக்குநர்,நெடுஞ்சாலைத்துறை,சென்னை, அவர்களின் செ.மு.க.எண்.10/294/ஆணையம்/தொ.நு.கு/ 2025 நாள்.19.05.2025.
4. தலைமைப் பொறியாளர்(தே.நெ)சென்னை அவர்களின்,கு.எண் (கோ.மு.10வ) 5050/ஒப்-2 / தே.நெ/ 2025/ நாள்.21.05.2025.

*********

தமிழக ஆளுநர் அவர்களுக்காகவும், அவர்களது சார்பிலும், மேற்கண்ட பணிக்கு பார்வை (1)ன்படி தங்களிடமிருந்து பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி விலை குறைப்பு பேச்சுவார்தைக்குப்பின் ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் 18.88% மதிப்பீட்டு விலைக்கு குறைவாக (2024-25) ஜி.எஸ்.டி உட்பட மொத்த ஒப்பந்தத் தொகைக்கு ரூ.12,30,09,692/-(ரூபாய் பன்னிரண்டு கோடியே முப்பது இலட்சத்து ஒன்பதாயிரத்து அறுநூற்று தொண்ணுற்று இரண்டு மட்டும்) (அடிப்படைத் தொகை ரூ.10,42,45,502/- ஜி.எஸ்.டி @ 18% ரூ.1,87,64,190/-)க்கு ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

தாங்கள் ஒப்பந்தப்புள்ளியுடன் முன்வைப்புத் தொகையாக ரூ.7,70,000/-க்கு வைப்பு இரசீது வடிவில் செலுத்தியுள்ளீர்கள்.

தாங்கள் மேற்கண்ட பணிக்கு பிணை வைப்பு தொகையாக ரூ.16,91,000/-க்கு செலுத்த வேண்டும்.

மேலும், தாங்கள் மேற்கண்ட பணிக்கு 15.00% மேல் மதிப்பீடு விலைக்கு குறைவாக செய்துள்ளதால், தாங்கள் கோரியுள்ள ஒப்பந்த மதிப்பிற்கும் அழைக்கப்பட்ட ஒப்பந்த மதிப்பீடு தொகைக்கும் உள்ள வித்தியாசத்திற்கும் 50% கூடுதல் பிணை வைப்பு தொகை செலுத்தப்பட வேண்டும். என்பதன் அடிப்படையில் கூடுதல் பிணை வைப்பு தொகையாக ரூ.1,43,15,000/- செலுத்தப்பட வேண்டும்.

/த.பி.பா/

எனவே, மேற்கண்ட பிணை வைப்பு தொகை மற்றும் கூடுதல் பிணை வைப்பு தொகை (16,91,000 + 1,43,15,0000) ஆக மொத்தம் ரூ.1,60,06,000/- (ரூபாய் ஒரு கோடியே அறுபது இலட்சத்து ஆறாயிரம் மட்டும்) தேசிய சேமிப்புப் பத்திரங்களாகவோ, கிஷான் விகாஷ் பத்திரங்களாகவோ, அல்லது வைப்பு இரசீது வடிவிலோ 27.06.2029 வரை செல்லத்தக்க வகையில் கோட்டப் பொறியாளர் (தே.நெ) சேலம் அவர்களின் பதவியின் பெயரில் அடமானம் செய்யப்பட்டு ஒப்பந்த உடன்படிக்கை மேற்கொள்ள கொண்டு வரவேண்டும். மேலும் நடப்பாண்டிற்குறிய சரக்கு மற்றும் சேவை வரிச் சான்றிதழ் கொண்டு வர வேண்டும்.

இப்பணிக்கான ஒப்பந்த உடன்படிக்கையில் கையொப்பமிட வரும்பொழுது நெடுஞ்சாலைத்துறையில் பதிவு செய்துள்ள ஒப்பந்தகாரரை அறிமுகமான நபரை சாட்சியாக அழைத்து வரவெண்டும். மேலும் இப்பணிக்கு கீழ்க்கண்டவாறு தொழில்நுட்ப உதவியாளர்கள் நியமனம் செய்ய வேண்டும்.

ஒரு வருட அனுபவமுள்ள பி.இ (சிவில்) பொறியியல் பட்டதாரி ஒன்று மற்றும் சிவில் டிப்ளமோ படித்த ஐந்து வருட அனுபவமுள்ள இரண்டு தொழில்நுட்ப உதவியாளரின் சம்மதக் கடிதம் மற்றும் அவர்களது கல்வித் தகுதி சான்றிதழ் நகல் சான்றொப்பம் பெற்று இவ்வலுவலகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

எழுத்து மூலம் செய்துகொள்கிற இந்த ஒப்பந்தம் தான் தங்களுக்கும் இந்த இலாக்காவிற்கும் அடிப்படை உரிமையாக கருதப்படும். தாங்கள் ஒப்பந்தப்பத்திரத்தில் முதலில் கையொப்பமிட்ட பிறகு அரசாங்கம் சார்பில் கண்காணிப்புப் பொறியாளர் (தே.நெ) சேலம், அவர்களால் கையொப்பமிட்ட பிறகுதான் செல்லத்தக்கதாகும்.

தாங்கள் இவ்வலுவலகத்திற்கு ஒப்பந்தப் பத்திரத்தில் கையொப்பமிட 15 தினங்களுக்குள் வரத்தவறினால் தங்களுடைய வைப்புத் தொகை P.S. to S.S.R.B. விதி எண் 104.05-ன் படி பறிமுதல் செய்யப்படும்.

இது அபராதமாக கருதப்படாமல் இந்த இலாக்கா அடைந்த இழப்பை ஈடுசெய்யும் விதத்தில் எடுத்துக் கொள்ளப்படும்.

ஓம்/-ஞா.தெட்சிணாமூர்த்தி,
கண்காணிப்புப் பொறியாளர்,
(தே.நெ) சேலம்.

நகல்: கோட்டப் பொறியாளர் (தே.நெ) சேலம்

நகல்: உதவிக் கோட்டப்பொறியாளர் (தே.நெ) சேலம்
தகவலுக்காக அனுப்பப்படுகிறது

//உண்மை நகல்/உத்தரவுப்படி//

துணை கண்காணிப்புப் பொறியாளர்,
(தே.நெ) சேலம்.

Signature Not Verified
Digitally signed by M SHANMUGAM
Date: 2025.08.14 15:49:50 IST
Location: eProcure-EPROC